மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 4,316 விவசாயக் குடும்பங்கள்.

(இ) பழுதடைந்த வீடுகளைத் திரும்பிக் கட்டுவதற்கும் உடைகளுக்குமாக ரூ. 2,29,880-ம் தக்காவிக் கடனாக ரூ. 16,250-ம் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு நிதி உதவியாக ரூ. 8,000-மும் வழங்கப்பட்டுள்ளது.

(உ) 1,821.83 ஏக்கர்.

Work done in the Kalaignar Karunanidhi in Tiruchirap-

* 345 Q.—S. S. THENNARASU (on behalf of THIRU KATTOOR GOPAL) : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have received any representation to include the profession of "Barbers" in the list of professions to be examined by the Committee constituted by the Government recently to study the sixteen categories of professions and the workers engaged therein who are the under-dogs of the society; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

முடிதிருத்துகிற தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள்

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. காட்டூர் கோபால் சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்து வருகிற பதினாறு வகை தொழில்கள்—தொழிலாளர்கள் பற்றி ஆராய்ந்திடுவதற்கு, அண்மையில் அரசு அமைத்துள்ள குழுவின் பரிசீலனைக்குரிய தொழில்களின் பட்டியலில், "முடி திருத்துகிற தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களும்" சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.